தேதி:-13.08.2019 அ.வ.எண்.281/2018 வா.சா.1 (ராஜாராம்)

முதல்விசாரணை :-

நான் வாதி. 04.01.1998 ல் எங்களுக்குள் ஏற்பட்ட குடும்ப ஏற்பாட்டு உறுதிஏற்பு ஆவணம் சான்றிடப்பட்ட நகல் வா.சா.ஆ.1. எங்கள் தகப்பனார் கருப்பஞ்செட்டியாரின் இறப்புச்சான்றிதழ் நகல் வா.சா.ஆ.2. இந்த ஆவணம் பிரதிவாதிதரப்பில் ஆட்சேபணையுடன் குறியீடு செய்யப்பட்டது.பிரதிவாதிக்கு நான் கொடுத்த சட்டஅறிவிப்பின் நகல் வா.சா.ஆ.3. பிரதிவாதி கொடுத்த பதில் அறிவிப்பு வா.சாஆ.4. நான் கொடுத்த மறுஅறிவிப்பின் அலுவலக நகல் வா.சாஆ.5. அதை பிரதிவாதியின் வழக்கறிஞர் பெற்றுக் கொண்டதற்கான அஞ்சல் ஒப்புதல் அட்டை வா.சா.ஆ 6. 02.05.2008 ல் பிரதிவாதி பெயரில் என் தகப்பனார் எழுதிக் கொடுத்ததாகச் சொல்லப்படும் செட்டில்மெண்டு பத்திரத்தின் நகல் வா.சா.ஆ.7. ஆகவே தாவாப்படி தீரப்பாக வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு அதை தட்டெழுத்தாளருக்கு என்னால் சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் வாசித்துப் பார்க்கப்பட்டு/ சாட்சிக்கு வாசித்துக்காண்பித்து அதை சரியென்று ஒப்புக்கொண்டு சாட்சி கையெழுத்திட்டார் / கையொப்பமிட்டார்.

முதலாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,
மதுரை.